බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 13 | ශ්‍රේණිය / தரம் / Grade: தமிழ் உயர் தரம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 3 |

அறிவுறுத்தல்:

* பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

* பகுதி I இல் முதலாம் வினாவில் இருபது வினாக்கள் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களுடன் இணைத்துக் கொடுக்கவும்.

* மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

## பகுதி I

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. பின்வருவனவற்றுள் மூன்று வகை மெய்களும் தொடராக இடம்பெற்ற ஒரு சொல்
1. பார்த்தான் 2. வாழ்ந்து 3. வாழ்த்து 4. வாழ்க்கை 5. சிரித்தான் ( )

2. பின்வருவனவற்றுள் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
1. எஃகு 2. அஃறிணை 3.கஃறீது 4. முஃடீது 5. பஃறொடை ( )

3. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கம்
1. சென்றார் 2. வந்தார் 3. கற்றார் 4. அடைந்தார் 5. பார்த்தார் ( )

4. பின்வருவனவற்றுள் குற்றியலுகரம் அல்லாதது
1. ஆறு 2. நூறு 3. ஏழு 4. எட்டு 5. ஒன்பது ( )

5. பின்வருவனவற்றுள் பால் பகா அஃறிணை
1. மாடு 2. பசு 3. கடுவன் 4. பைத்தியக்காரன் 5. முட்டாள்
( )

6. கண்டனர் என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள ‘அன்’ எனும் உறுப்பு
1. சாரியை 2. சந்தி 3. இடைநிலை 4. விகாரம் 5. விகுதி ( )

7. இரண்டு விகாரங்கள் இடம்பெற்ற சொல்
1. செத்தான் 2. மகிழ்ந்தான் 3. வந்தான் 4. நின்றான் 5. ஈந்தான் ( )

8. பின்வருவனவற்றுள் இதழ் குவித்து ஒலிக்கப்படும் முற்றியலுகரம்
1. புயல் 2. பாபு 3. பாண்டு 4. ஊர்ந்து 5. தீர்வு ( )

9. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை
1. பாடினான் 2. ஆடினான் 3. ஓடினான் 4. நாடினான் 5. தேடினான் ( )

10. பின்வருவனவற்றுள் விளி வேற்றுமை ஏற்காத சொல்
1. அம்மா 2. அப்பா 3. அண்ணன் 4. அக்கா 5. அவன் ( )

11. மரத்தில் ஒரு கிளி... இவ்வாக்கியத்தில் மறைந்து வந்த வாக்கிய உறுப்பு
1. எழுவாய் 2. பயனிலை 3. அடைமொழி4. இருந்தது 5. செயப்படுபொருள் ( )

12. ஊரினுள்ளே ஒரு பாடசாலை... இடைவெளியில் வர முடியாத பொருத்தமற்ற சொல் யாது?
1. இருந்தது 2. இருக்கிறது 3. இருக்கும் 4. இருந்தன . உண்டு ( )

13. பின்வருவனவற்றுள் உடன்பாட்டு வினை
1. கண்டிலன் 2. காணாத 3. காணவில்லை 4. கண்டனன் 5. காணாதது
( )

14. இளநீர் வெட்டினான். இது
1. சினயாகுபெயர் 2. பொளாகுபெயர் 3. தானியாகு பெயர் 4. குணவாகுபெயர்
5. அளவையாகுபெயர் ( )

15. அம்மா! வா. என்பது
1. கூற்று வாக்கியம் 2. வினா வாக்கியம் 3. ஏவல் வாக்கியம்
4. வியங்கோள் வாக்கியம் 5. வியப்பு வாக்கியம் ( )

16. பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியமைக்கு உதாரணம் அல்லாதது
1. பெற்றான் 2. நட்டான் 3. நக்கான் 4. கற்றான் 5. விட்டான் ( )

17. நகம், குருதி, மயிர், நரம்பு என்பன
1. பொருட்பெயர்கள் 2. இடப்பெயர்கள் 3. காலப் பெயர்கள்
4. குணப் பெயர்கள் 5. சினைப் பெயர்கள் ( )

18. நான் நாளை வருகிறேன். என்பது
1. திணை வழு 2. எண் வழு 3. இட வழு 4. கால வழு 5. மரபு வழு ( )

19. பாரதியார் ஒரு புலவர். இங்கு இடம்பெற்ற பயனிலை
1. வினைப் பயனிலை 2. பெயர்ப் பயனிலை 3. வினாப் பயனிலை
4. தனி வாக்கியம் 5. தொடர் வாக்கியம் ( )

20. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. இங்கு தொழுவது என்பது
1. வினைமுற்று 2. வினையாலணையும் பெயர் 3. தொழிற் பெயர்
4. ஆக்கப் பெயர் 5. ஆகுபெயர் ( )

(20 புள்ளிகள்)

(02) (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

குழந்தைப் பருவத்திலிருந்து ஆடல் பாடலோடு வளர்ந்து வருபவன் மனிதன். மற்ற வாழ்க்கைக் கூறுகளை அறிவதற்கு முன்னே குழந்தை ஆடியும் பாடியும் வளர்ந்து வருதல் காண்கின்றோம். உலகெங்கும் உள்ள எல்லா மக்களினங்களும் மிகப் பழங்காலம் முதல் கொண்டு ஆடல் பாடல் கலைகளை போற்றி மகிழ்ந்து வந்துள்ளன. உழைத்துக் களைத்த களைப்பு நீங்குவதற்காகவும் உள்ளத்தில் நிரம்பிய உணர்ச்சியை புலப்படுத்துவதற்காகவும் பழங்கால மக்கள் ஆடலையும் பாடலையும் கையாண்டு மகிழ்ந்தனர். அவ்வாறு கையாண்ட ஆடல் பாடல்களுக்கு அடிப்படைக் காரணம் பொதுவாக இருந்தும் புலப்படுத்திய உணர்ச்சிகளும் பெற்ற பயன்களும் பொதுவாக இருப்பினும் ஆடல் பாடல்களின் அமைப்பும் வளர்ச்சியும் ஒரே தன்மையாக இல்லை. நாட்டுக்கு நாடு இனத்திற்கு இனம் ஆடல் பாடல்கள் வெவ்வேறு வடிவங்கள் கொண்டு வளர்ந்து அமைந்தன. உலகத்து மக்கள் எல்லோருக்கும் பசி ஒரே வகையாக இருப்பினும் உணவு என்னும் பொதுத் தேவை ஒரே வகையாக இருப்பினும் அந்தந்த நாட்டில் கிடைக்கும் உணவுப் பொருட்களின் வேறுபாட்டால் உணவு வகைகளும் உண்ணும் முறைகளும் வெவ்வேறாக அமைந்துள்ளன அல்லவா? அவை போலவே நாட்டுக்கு நாடு இனத்திற்கு இனம் தட்பவெப்ப நிலை வேறுபாடுகளாலும் பழக்க வழக்க வேறுபாடுகளாலும் மொழி நாகரிக வேறுபாடுகளாலும் ஆடல் பாடல் கலைகளும் வெவ்வேறு வகையாக வளர்ந்து அமைந்தன. தமிழ் நாட்டு இசைக் கலையிலும் நாட்டியக் கலையிலும் உள்ள சிறப்பியல்புகளுக்க அவைகள் காரணங்கள் ஆகும். அன்றியும் பல நூற்றாண்டுகளாக, இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாக அவை தொடர்ந்து பண்பட்டு விளங்கி வருவதால் மற்ற நாட்டுக் கலைகளுக்கு இல்லாத வரலாற்றுப் பெருமையோடு தெளிவுறத் திகழ்கின்றன. கர்நாடக சங்கீதம் என்றும் பரத நாட்டியம் என்றும் அக்கலைகள் இன்றும் தனிப் பெயர்கள் பெற்று சிறந்து விளங்குதல் காண்கிறோம்.

(13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பாரதத்திற்குக் காப்பியத் தலைவன் யார்? கண்ணபிரான் என்பார். அர்ச்சுனன் என்பார். உதிட்டிரன் என்பாரும் முரணி நிற்க ஈண்டுக் குறிப்பிட்ட அனைவரையும் தனது அன்பினால் பிணைத்த அங்கர்க்கோனாகிய கர்ணனே காப்பியத் தலைவன் என்பாரது கூற்று வலிமையுற்று நிற்கின்றது. நாகாயுகத்தினை மறுக்காலும் ஏவாது பார்த்தனது சரமாரிக்கிலக்காகி நின்ற வேளையிலே முதல்வனாகிய கண்ணன் தான் வாஞ்ச வேதியன் வடிவம் கொண்டு வந்து, "வறுமையால் வாடினேன் இக்கணத்து எனக்கு இயைந்ததொன்று அளிப்பாய்" என இரந்து நின்றான். அதைக் கேட்டு உளமகிழ்ந்து, "ஓவிலாது யான் செய்த புண்ணிய மனைத்தும் உதவினேன். கொள்க நீ" என உரைத்தான் கர்ணன். குருசேத்திரப் போர்க்களத்தில் போர் தொடங்கிய பதினேழாம் நாளன்று நடந்த தெய்வக் காட்சியை அகக்கண்ணால் நோக்குவோமாக. பொழுது மேற்றிசையிலே இரண்டு விற்கிடை உயரத்தில் நிற்கிறது. சூரியனது பொன் போன்ற கிரணங்கள் புதல்வனது ஆகத்தினை மெல்லெனத் தழுவி நிற்கின்றன. அர்ச்சுனனது ஆயிரம் அம்புகள் துளைத்த துளையினின்றும் பாய்கின்ற செங்குருதி சூரிய குமாரனது உடலத்திலே ஆயிரம் கிரணங்களைப் போலத் திகழ்கின்றது. இரு பெரு வீரர்களது ரதத்தில் பூட்டிய குதிரைகளும் செயலற்று நிற்கின்றன. கண்ணபிரான் விஜயனைச் 'செருவொழுதி' என கையமர்த்தி கர்ணனை நோக்கி வருகின்றான். வேதியன் வடிவமாக வந்த கண்ணன் தான் இரத்தலும் கர்ணன் இதயத்தில் பாய்ந்து கிடந்த அம்பினை வாங்கி அங்கு பாய்ந்த செந்நீரே நீராகத்தான் புரிந்த புண்ணியமனைத்தினையும் தானம் செய்கிறான். பெற்ற கண்ணனாகிய வேதியன், "வேண்டிய வரங்கேள்" என்கிறான். இது கேட்ட கர்ணன், "இல்லை என்றிரப்போர்க்கு இல்லை என்று உரையா இதயம் நீ அளித்தருள்" என்கின்றான். கருணை வள்ளலாகிய கண்ணபிரான் உளமுருகி கண்களில் நின்று சொரிந்த நீரினாலே கர்ணனை நீராட்டி தனது தெய்வ வடிவோடு அவன் கண்டு களிக்க காட்சியளிக்கின்றான். தனஞ்செயன் கணையால் சாய்ந்து உயிர்விடும் வேளையிலே செங்கண் அமல நாரணனைக் காணவும் பெற்றேன் எனக் கூறிக் கர்ணன் அகமகிழ்கிறான்.

(அ) பாரதக் கதையின் காப்பியத் தலைவன் கர்ணனே என்பாரது கூற்று வலிமை பெறுவதற்குக் காரணம் யாது?

(ஆ) இவ்வுரைப் பகுதியில் கர்ணனது கொடைச்சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

(இ) சூரிய குமாரன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்? அவன் அவ்வாறு குறிப்பிடப்படக் காரணம் யாது?

(ஈ) இவ்வுரைப் பகுதியில் குறிப்பிடப்படும் அர்ச்சுனனது வேறு பெயர்கள் எவை?

(உ) இறக்கும் தறுவாயில் கண்ணன் மகிழ்ச்சி அடையும்படியாக நடைபெற்ற சம்பவம் யாது?

(ஊ) கண்ணன் கர்ணனிடம் விரும்பிய வரங்கள் கேட்கும்படிக் கூறக் காரணம் என்ன?

(12 புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) தமிழும் அறிவியலும்

(ஆ) கற்க கசடறக் கற்க...

(இ) இணையத்தில் ஓர் இலக்கிய உலகம்

(ஈ) பேராசிரியர் ம.மு.உவைஸ்

(உ) மெல்லத் தமிழினி...

## பகுதி II

(04) (அ) சங்க காலம் பக்தி இலக்கிய தோற்றக் காலம் எனலாம். இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆதாரத்துடன் விளக்குக.

(ஆ) சங்கமருவிய கால பக்தி இலக்கிய வளர்ச்சி பற்றி கருத்துரை வழங்குக.

(இ) பல்லவர் கால பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு அப்பரின் பங்கு மகத்தானது. விரித்துரைக்க.

(15 புள்ளிகள்)

(05) (அ) சோழர்கால சிற்றிலக்கிய வளர்ச்சி பற்றிக் கருத்துரை வழங்குக.

(ஆ) சோழர்கால சிற்றிலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

(இ) சோழர்கால சிற்றிலக்கியங்களுக்கும் நாயக்கர் கால சிற்றிலக்கியங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

(06) (அ) ஈழத்தின் ஆரம்ப கால சோதிட நூல்களின் வளர்ச்சி பற்றி விளக்குக.

(ஆ) ஈழத்தின் ஆரம்ப கால வைத்திய நூல்களின் வளர்ச்சி பற்றி விளக்குக.

(இ) ஈழத்தின் ஆரம்ப கால வரலாற்று நூல்களின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

(07) பின்வருவோரில் யாரேனும் மூவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை மதிப்பிடுக.

(அ) சைமன் காசிச் செட்டி.

(ஆ) மகாகவி து. உருத்திரமூர்த்தி.

(இ) இ. முருகையன்.

(ஈ) பேராசிரியர் வி. செல்வநாயகம்.

(உ) சுவாமி விபுலாநந்தர். (15 புள்ளிகள்)

(08) (அ)

1. மண் - மன் ஆகிய இரு சொற்களுக்குமிடையேயான கருத்துப் புலப்படும் வகையில் அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரண வாக்கியம் எழுதுக.

2. இரு எனும் வினை முதல் வினையாகவும் துணைவினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

3. செய்வினை - செயப்பாட்டுவினை ஆகிய இரு வினைகளுக்குமிடையிலான வேறுபாடுகளை உதாரணத்துடன் தருக.

4. இது எமது பாடசாலை - இது நமது பாடசாலை ஆகிய இரு வாக்கியங்களுக்குமிடையிலான வேறுபாடு யாது?

5. மகரக்குறுக்கம் என்பது யாது? ஓர் உதாரணம் தருக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

1. காரணப் பெயர் - இடுகுறிப் பெயர்
2. தெரிநிலைவினை - குறிப்பு வினை
3. உடனிலை மெய்ம்மயக்கம் - வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

(05 புள்ளிகள்)